**செய்தி வெளியீடு எண்: 52/2022** **நாள்: 24.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப்பணியில்</u>**
**<u>25 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டம்</u>**
**<u>சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப்பணியில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதில் தற்போது 11 ஆயிரம் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியின் போது அகற்றப்படும் மரங்களுக்கு மாற்றாக புதிய மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. இதில் மறு நடவு செய்யத்தக்க பெரிய மரங்கள் அதற்கான சூழல் உள்ள இடத்தில் நடப்படுகிறது.

இந்த பணியில் புதிய வழித்தடம், உயர்மட்ட பாலம், சுரங்கப்பாதை போன்றவை அமைக்கப்படுகிறது. அவ்வாறு பாதை பணிகள் நடைபெறும் போது, அப்பகுதியில் பல்வேறு மரங்கள் கணக்கீடு செய்து வெட்டப்படுகிறது. வெட்டப்படும் மரங்களுக்கு மாற்றாக, புதிய மரக்கன்றுகளும், மறு நடவு செய்யக்கூடிய மரங்களுக்கு அதற்கான இடத்தை தேர்வு செய்து வளர்க்கப்பட்டு வருகிறது.

நவம்பர் 2021-ஆம் ஆண்டு முதல் மரம் வெட்டப்பட்டு அதனை ஈடு செய்யும் வகையில் 30 வகையான மரங்கள் நடப்பட்டு வருகிறது. சென்னை மாநகர பகுதிகளிலும் அதன் சுற்று பகுதிகளிலும் பல்வேறு வகையான மரங்கள், மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

வேம்பு, பூவரசு, நெல்லி, வில்வம், அசோகா, நாவல் போன்ற 30 வகையான நாட்டு மரங்களும், மரக்கன்றுகளும் நடப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட 30 வகையான மரங்களிலிருந்து அதிகளவு ஆக்ஸிஜன் வெளிக்கொன்றும் மரங்களாகவே இருக்கும். ஒரு மரம் 30-செ.மீ சுற்றளவு மேல் இருக்கும் பட்சத்தில் அது அகற்றப்படும் போது அதற்கு பதிலாக 12 மரக்கன்றுகள் நடப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தை சார்ந்த சுற்றுசூழல் நிபுனர் குழு ஆய்வு மேற்கொண்ட பின்னரே மரங்கள் அகற்றப்படுவதும், அகற்றப்படும் இடத்திற்கு ஏற்ற மரங்களும், மரக்கன்றுகளும் நடப்படுகின்றது.

அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரி, நிறுவனங்கள், அரசு அலுவலக வளாகங்களில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக மரங்களும், மரக்கன்றுகளும் நடப்படுகின்றது.

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப்பணிகள் 3 வழித்தடங்களிலும் இதுவரை 2600 மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் ஈடு செய்யும் வகையில் செனாய் நகர் செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி, பச்சையப்பன் கல்லூரி, பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா பள்ளி போன்ற 25 இடங்களில் 11 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மரங்கள் இவ்வாண்டு ஜூலை மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீண்டும் வளரக்கூடிய 129 வகையான மரங்கள் அவற்றிற்க்கு உகந்த இடத்தில் மாற்றி நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. நடப்படும் மரங்கள், மரக்கன்றுகள், மரச்செடிகளை அதற்குரிய ஒப்பந்தகாரர்கள் மூலம் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**